**MCOP NO: 5035/2024** **DATE:** 13.03.2026

ம.சா : 1

பெயர் : திரு.நடேசன்

த/பெ : திரு.ஸ்ரீனிவாசன்

வயது : 51

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 16 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய வருமானத்தை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. கட்டிட தொழிலாளர் நல சங்கத்தின் அடையாள அட்டையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் உறுப்பினராக நான் இல்லை என்பதால் அதை நான் தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் நான் தான் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றேன். என்னுடைய சொந்த வாகனம் ஆகும். என்னுடைய ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தானது என்னுடைய அஜாக்கிரதையாலும், ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் நானே வாகனத்தை ஓட்டியதாலும் நானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரான லாரி ஓட்டுநரின் கவனகுறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 2024 ற்கு பின்னிட்டு என்னுடைய காயங்களுக்கு தொடர்சிகிச்சை மேற்கொண்டேன் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய கால் பகுதியை தவிர வேறு எந்த பாகங்களிலும் எலும்பு முறிவு ஏற்படவில்லை. காயங்கள் தான் ஏற்பட்டது. விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமடைந்து விட்டதால் தான் நான் தொடர்சிகிச்சை செய்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எனக்கு மருத்துவ செலவாக ரூ.4,000/-ற்கு மட்டும் தான் பில்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. அதனை 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு 13.03.2026 ல் அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.